# பதினாறுகால் மண்டபம்
# PADINARUKAAL MANDABAM- AN OVERVIEW

முனைவர் உமா அழகிரி

DR UMA ALLAGHERY

"TAM 2001 Y (3): Unit 8.1 Padinarukaal Mandabam- An Overview(PPT) " by Dr Uma Allaghery, Mahatma Gandhi Institute is licensed under CC BY 4.0

# பதினாறுகால் மண்டபம்

- பதினாறுகால் மண்டபம் என்னும் நாடத்தைப் படைத்தவர் முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள்.
- பட்டினப்பாலைப் பற்றித் திருச்சி மாவட்டம், திருவெள்ளறையில் காணப்படும் கல்வெட்டையும், மறைமலை அடிகள் எழுதிய ‘பட்டினப்பாலை அராய்ச்சியுரை’ என்ற நூலையும் கல்வெட்டு அறிஞர் திரு சதாசிவப் பண்டாரத்தார் எழுதிய ‘பாண்டிய வரலாறு’ என்ற நூலையும் தழுவி, *பதினாறுகால் மண்டபம்* என்னும் நாடகம் எழுதப்பட்டுள்ளது.

# நாடக அமைப்பு

- காட்சி
- காலம்
- நாடக உறுப்பினர்கள்
- இடம்
- காட்சி அமைப்பு

# நாடக உறுப்பினர்கள்

- முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன்- பாண்டிய நாட்டைக் கி.பி. 1216 முதல் 1238 வரை ஆட்சி புரிந்தவர்
- குருகுலத்தரையர் – சுந்தரபாண்டியனின் அமைச்சர்
- காங்கேயர்- சுந்தரபாண்டியரின் அரசியல் அதிகாரிகளுள் ஒருவர்
- மழவச் சக்கரவர்த்தி-சுந்தரபாண்டியனின் படைத்தலைவர்
- இளவரசன் இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன்-சுந்தரபாண்டியனுக்குப் பிறகு சில நாட்கள் ஆட்சி செய்தவர்
- காரணை விழுப்பரையர் – பாண்டிய நாட்டுத் தமிழ்ப்புலவர்
- கடியலூர் உருத்திரக் கண்ணனார்-பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை , குறுந்தொகை – 352, அகநானூறு – 167 ஆகிய பாடல்களின் ஆசிரியர்
- முல்லை – கடியலூர் உருத்திரக் கண்ணனாரின் மனைவி
- கரிகால் பெருவளத்தான்- சங்ககாலச் சோழ மன்னன், பட்டினப்பாலைப் பாடலின் தலைவன்

# காட்சியும் இடமும் காலமும்

- இந்த நாடகத்தில் அமைந்துள்ள காட்சிகள்: ஐந்து
- இந்த நாடகத்தில் குறிப்பிட்டுள்ள இடங்கள்:
  - சோழ நாடு
  - பதினாறுகால் மண்டபம்
  - கடியலூர்
- பதினாறுகால் மண்டபத்தில் குறிப்பிட்டுள்ள காலம்:
  - பிற்காலச் சோழர் காலம்
  - சங்க காலம்

# காட்சி ஒன்று

- மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ நாட்டு அரசனோடு சண்டையிட்டான். அவனுக்கு வெற்றி கிடைத்தது.
- அவன் சோழ நாட்டைக் கைப்பற்றினான்.
- அவன் பழிக்குப் பழி வாங்கினான்.
- அவன் சோழ நாட்டின் அழிவைப் பற்றி அறிந்துகொண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்.
- பதினாறுகால் மண்டபம் அழியாமல் இன்னும் நிற்கிறதைக் கேள்வியுற்ற சுந்தரபாண்டியன் வியப்பு அடைந்தான்.
- புலவர் காரணை விழுப்பரையர் இம்மண்டபத்தை இடிக்கத் தடுத்தார்.

# காட்சி இரண்டு

- இம்மண்டபத்தை அழிக்காவிட்டால்தான் பாண்டியனுக்குப் பெருமை என்று உரைத்தார் புலவர் விழுப்பரையர். இதை இடித்தால் வழிவழி என்றுமே பாண்டியர்களுக்கு வரலாற்றில் ஒரு கறையாக இருந்துகொண்டே வரும் என்றார்.
- சுந்தரபாண்டியன் இதை இடிக்காமல் இருப்பதன் காரணத்தைக் கேட்டான்.
- இந்த மண்டபம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது.
- சோழன் கரிகால் பெருவளத்தான் இந்த மண்டபத்தை உருத்திரக் கண்ணனார் என்ற புலவருக்குப் பரிசாக அளித்தார்.
- ஒரு புலவனுக்கு உரிமையான மண்டபத்தை அழிக்க யாருக்கும் உரிமை இல்லை என்றார்.
- இம்மண்டபம் உருத்திரக் கண்ணனாருக்கு எப்படி உரிமையாக்கிவிட்டதைப் பற்றிச் சுந்தரபாண்டியன் கேட்டான்.

# காட்சி மூன்று

- உருத்திரக் கண்ணனார் மற்றும் முல்லையுடைய இல்லற வாழ்க்கை
- குடிசையில் வாழ்ந்துகொள்ளுதல்; ஏழ்மை; கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலுள்ள அன்பு; உருத்திரக் கண்ணனாருடைய விருந்தோம்பல் தன்மை முதலிய செய்திகளை எடுத்துக் கூறியுள்ளார் விழுப்பரையர்.
- சோழ நாட்டையும் மன்னன் சோழ கரிகால் பெருவளத்தானையும் முந்நூறு வரிகள் கொண்டுள்ள ஒரு கவிதையைப் படைத்துள்ளார் உருத்திரக் கண்ணனார்.
- முல்லையைப் பிரிந்துபோக விரும்பவில்லை அதனால் கரிகால் பெருவளத்தான் என்ற அரசனைப் போய்ச் சந்திக்கவில்லை.
- "ஏழ்மையிலும் வறுமையிலும் எந்நேரத்திலும் முல்லை அவருக்குக் காட்டிவரும் அளவற்ற தாயன்பினால் அவருடைய உள்ளம் ஒருநொடி கூட மனைவியைப் பிரிய மனம் வரவில்லை.
- இப்பிரிவினைப் பற்றிப் பட்டினப்பாலை என்னும் பாடலில் குறிப்பிட்டுள்ளார் உருத்திரக் கண்ணனார்.

# காட்சி மூன்று

- பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தையும் கரிகால் பெருவளத்தானையும் சிறப்பிக்கிற ஒரு பாடல்.
- காவிரித்தாயின் பெருமையுடன் இப்பாடல் தொடங்குகிறது.
- சோழ நாட்டிலுள்ள பாக்கங்களையும், குறும்பாலுரையும், கழிசூழ் படப்பையையும், தண்டலையையும், பொய்கையையும், ஏரிகளையும், சாலையையும், அட்டிலையும், பள்ளியையும், பூஞ்சோலையையும், புறச்சேரியையும், முன்றிலையும், விழவறா ஆவணத்தையும், மக்கள் கலந்து இனிது உறையும் மறுகினையும், இருக்கையையும், கரிகால் பெருவளத்தான் அரசு உரிமை பெற்ற வகையையும் அவன் பகைவர்களின் நாட்டைக் கைப்பற்றுவதன் ஆற்றலையும் சிறப்பித்துப் பாடும் பாடலாக அமைந்துள்ளது பட்டினப்பாலை.
- பட்டினப்பாலையை உரிய முறையில், பெரிய இடத்தில், பெருவிழா ஒன்று எடுத்து மக்கள் நடுவில் அரங்கேற்றம் செய்யப்படும் எனக் கரிகால் பெருவளத்தான் உருத்திரக் கண்ணனாரிடம் தம் வேண்டுகோளைக் கூறியுள்ளார்.

# காட்சி நான்கு

- பதினாறுகால் மண்டபத்தைக் கட்ட ஆணையிடப்பட்டது.
- இதைக் கட்டுவதற்கு உரிய கற்கள் மலை நாட்டிலிருந்து எடுத்துவரப் பட்டன.
- கற்களைக் கொண்டுவந்த முறைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- பதினாறுகால் மண்டபத்தை உருவாக்க மக்களின் உதவி
- இதற்கு அடித்தளம் போட்டப்பட்டதும் கரிகால் தன் வீரக் கைகளால் முதல் தூணை நிலை நாட்டுகிறான். அவன் அடிக்கடி வேலையின் முன்னேற்றத்தை வந்து பார்த்தான்.
- கடைசியில் பதினாறுகால் மண்டபம் கண்ணைப் பறிக்கும் கலைக்கூடம் போல் காட்சி அளித்தது. அரகேற்றத்தின் ஏற்பாடு செய்யப்பட்டது.

# காட்சி நான்கு

- ஊர் அலங்காரம் செய்யப்பட்டது; ஊர் விழாவைப் பற்றித் தெரிவிக்கப் பறை அடிக்கப்பட்ட செய்திகள
- பட்டினப்பாலையின் அரங்கேற்றம்:
- - காவிரி ஆற்றின் பெருமையைப் பாடுதல்
- - சோழ நாட்டின் பெருமையைப் பாடுதல்
- - காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்தல்
- - புலவருடைய அன்பு உள்ளம் – பிரிந்துபோக விரும்பவில்லை எனற பகுதி
- - கரிகால் பெருவளத்தானின் புகழைப் பாடுதல்; உருத்திரக் கண்ணனாருக்கு வழங்கிய பரிசுகள்

# காட்சி ஐந்து

- பதினாறுகால் மண்டபம் என்பதை இடிக்காமல் இருப்பதன் முடிவு
- மூவேந்தர் கொடியாலும் எல்லையாலும் வேறுபட்டிருந்தாலும் மொழியும் புலவரும் அவர்களுக்குப் பொது
- சுந்தரபாண்டியன் தன் படையுடன் தாயகத்துக்குத் திரும்பினான் வந்த செய்தியும் இந்நாடகத்தில் காணப்படுகிறது.